# வர்த்தகமும் சுற்றுலாவும்

*1988 இல் இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகத் துறையின் அபிவிருத்தி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் சாதகமற்றதொன்ருக இருந்தது. சிஎஉ நியதிகளில் ஏற்றுமதிகளின் பெறுமதி 1987 இன் 4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2 சதவீதத்திற்கும் குறைவாகச் சிறிதளவால் மட்டும் அதிகரித்தது. மேலும் 1987 இல் 4 சதவீதத்திஞல் வீழ்ச்சியுற்ற இறக்குமதிகள் மீதான செலவினம் 1988 இல் 5 சதவீதத்திஞல் அதிகரித்தது. இதன் விளைவாக வர்த்தகக் குறை முன்னைய ஆண்டின் 18 சதவீதம் கொண்ட சுருக்கத்திற்கு மாருக 1988 இல் 12 சதவீதத்திஞல் உயர்வடைந்தது.*

ஏற்றுமதியின் மெதுவான வளர்ச்சிக்குத் தெங்கு உற்பத்திகள், புடவைகளும் ஆடைகளும், பெற்ரேலிய உற்பத்திகள் என்பனவற்றிலிருந்தான வருவாய்கள் குறைவடைந்தமையே முக்கிய காரணமாக இருந்தது. 1988 இல் இறப்பர், சிறு வேளாண்மை உற்பத்திகள், இரத்தினக் கற்கள் ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் என்பனவற்றிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் ஏற்றுமதியில் குறிப்பிடத்தக்க மெதுவான வளர்ச்சியைப் பதிவு செய்யப் போதுமானவையாக இருக்கவில்லை.

தற்காலிகச் சுங்கத் தரவுகளின்படி, 1988 இல் இறக்குமதி மீதான செல வினம் ரூ, 703,200 இலட்சமாகவும் (சிஎஉ 16,450 இலட்சம்), ஏற்றுமதி வருவாய்கள் ரூ. 470,920 இலட்சமாகவும் (சிஎஉ 11,010 இலட்சம்) அமைந்து ரூ. 232,280 இலட்சம் (சிஎஉ 5,430 இலட்சம்) கொண்ட வர்த்தகப் பற்ருக்

## அட்டவணை 1.29

## வர்த்தகநிலுவை 1986—1988

பத்து இலட்சம் ரூபாய்களில்
(சி. எ. உ. பத்து இலட்சம் அடைப்புக் குறிக்குள்)

| ஆண்டு | இறக்குமதிகள் (அ) | | ஏற்றுமதிகள் (ஆ) | | வர்த்தக நிலுவை | |
|---|---|---|---|---|---|---|
| | சுங்கம் | சீராக்கப் பட்டது | சுங்கம் | சீராக்கப் பட்டது | சுங்கம் | சீராக்கப் பட்டது |
| 1986 ... | 51,282 (1,559) | 54,559 (1,658) | 34,092 (1,036) | 34,072 (1,036) | —17,189 (—523) | —20,487 (—623) |
| 1987 ... | 59,750 (1,568) | 60,528 (1,589) | 39,861 (1,046) | 41,133 (1,080) | —19,889 (—522) | —19,396 (—509) |
| 1988 (இ) ... | 70,320 (1,645) | 71,200 (1,665) | 47,092 (1,101) | 46,928 (1,097) | —23,228 (—543) | —24,272 (—568) |

(அ) தங்கக் கட்டிகளும் நாணயங்களும் நீங்கலாக.
(ஆ) மீள் ஏற்றுமதிகளை உள்ளடக்குகிறது.
(இ) தற்காலிகமானவை.

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்,
உணவு ஆணையாளர் திணைக்களம்,
இலங்கை வளமாக்கிக் கூட்டுத்தாபனமும் ஏனைய முக்கிய வளமாக்கி இறக்குமதியாளர்களும்,
வரையறுக்கப்பட்ட எயர் லங்கா,
இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம்.
இலங்கை பெற்ரேலியக்கூட்டுத்தாபனம்

குறையை ஏற்படுத்தியது. காலங்கடந்தமை, மற்றும் பதிவு செய்தலுடன் தொடர்பான ஏனைய காரணிகளுக்காகச் சுங்கத் தரவுகள் சீராக்கம் செய்யப்பட்ட பொழுது மொத்த ஏற்றுமதிகளின் பெறுமதி ரூ. 469,280 இலட்சமாகவும் (சிஎஉ 10,970 இலட்சம்) இறக்குமதிகளின் பெறுமதி ரூ. 712,000 இலட்சமாக வும் (சிஎஉ 16,650 இலட்சம்) அமைந்தன. இதன்படி சீராக்கப்பட்ட தரவுகள் வர்த்தகக் குறை 1987 இன் ரூ. 193,960 இலட்சத்திலிருந்து (சிஎஉ 5,090 இலட்சம்) 1988 இல் ரூ. 242,720 இலட்சத்திற்கு (சிஎஉ 5,680 இலட்சம்) 12 சதவீதத்தினால் அதிகரித்தமையைப் பிரதிபலித்தன.

1988 இல் தேயிலை தவிர்ந்த ஏற்றுமதிகளின் சராசரி விலைகள் முன்னைய ஆண்டின் விலைகளுடன் ஒப்பிடுகையில் சாதகமானதாக இருந்தன. எனினும் அரிசி, சீனி, கோதுமைத் தானியம் வளமாக்கி போன்ற முக்கிய இறக்குமதிகளின் விலைகள் 1987 இனைவிட மிகக் கூடியளவில் அதிகரித்தமையின் காரணமாக 1988 இல் வர்த்தக மாற்று விகிதம் 7 சதவீதத்தினால் மோசமடைந்தது.

அட்டவணை 1.30

**வெளிநாட்டு வர்த்தகம் 1979—1988**

| ஆண்டு | பத்து இலட்சம் ரூபாய்கள் | | | சுட்டெண்கள் 1981=100 | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | அளவு | | விலைகள் | | வர்த்தக மாற்று விகிதம் |
| | ஏற்று மதிகள்* (க. எ. பெ.) | இறக்கு மதிகள்* (கொ. கா. க.) | வர்த்தக நிலுவை | அனைத்து ஏற்றுமதி கள் | அனைத்து இறக்கு மதிகள் | அனைத்து ஏற்றுமதி கள் | அனைத்து இறக்கு மதிகள் | |
| 1979 .. | 15,286 | 22,560 | — 7,275 | 89 | 94 | 82 | 68 | 121 |
| 1980 .. | 17,595 | 33,942 | —16,347 | 95 | 111 | 92 | 86 | 107 |
| 1981 ... | 21,043 | 36,583 | —15,540 | 100 | 100 | 100 | 100 | 100 |
| 1982 ... | 21,454 | 41,946 | —20,492 | 105 | 100 | 98 | 104 | 94 |
| 1983 .. | 25,096 | 45,558 | —20,461 | 99 | 110 | 125 | 109 | 115 |
| 1984 .. | 37,347 | 47,541 | —10,194 | 116 | 114 | 160 | 114 | 140 |
| 1985 .. | 36,207 | 54,049 | —17,843 | 120 | 109 | 142 | 123 | 115 |
| 1986 ... | 34,072 | 54,559 | —20,487 | 128 | 124 | 126 | 114 | 111 |
| 1987 | 41,133 | 60,528 | —19,394 | 130 | 127 | 146 | 129 | 114 |
| 1988 (அ) | 46,928 | 71,200 | —24,272 | 134 | 130 | 166 | 157 | 106 |

* 1980 ஆம் ஆண்டிலிருந்து திருத்தியமைக்கப்பட்ட தரவுகள்.
(அ) தற்காலிகமானவை.

மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி.

## ஏற்றுமதிகள்

சீராக்கப்பட்ட சுங்கத் தரவுகளின்படி 1988 இல் ஏற்றுமதிகளிலிருந்தான மொத்த வருவாய்கள் 1987 இன் சிஎஉ 10,800 இலட்சத்துடன் (ரூ. 411,330 இலட்சம்) ஒப்பிடுகையில் சிஎஉ 10,970 இலட்சமாக (ரூ. 469,280 இலட்சம்) விளங்கி சிஎஉ நியதிகளில் 1.6 சதவீதங் கொண்ட வளர்ச்சியைக் காட்டியது.

1987 இன் ஒப்பிடத்தக்க எண் தொகை 4 சதவீதமாக இருந்தது. எனினும் 1988 இல் தனித்தனியான பண்டத் தொகுதிகள் கலந்த செயலாற்றத்தினைப் பதிவு செய்தன. வேளாண்மை ஏற்றுமதிகள் 1987 இன் 4 சதவீத வீழ்ச்சியைத் தொடர்ந்து 1988 இல் மீட்சியடைந்து 3 சதவீதங் கொண்ட மிதமான வளர்ச்சியைக் கொண்டிருந்தன. அதேவேளை கைத்தொழில் ஏற்றுமதிகள் முன்னைய ஆண்டின் 9 சதவீதங் கொண்ட வளர்ச்சிக்கு மாறாக 1 சதவீதங் கொண்ட சிறிதளவு அதிகரிப்பினை மட்டும் பதிவு செய்தன. 1987 இனைவிட 29 சதவீத அதிகரிப்பினைக் காட்டிய கனிப்பொருள் ஏற்றுமதிகளில் மிக மெச்சத்தக்க வளர்ச்சி காணப்பட்டது.

1977 இன் பொருளாதாரச் சீரமைப்பினைத் தொடர்ந்து கடந்த பத்தாண்டு காலமாக மிகக் கூடியளவு மாற்றங்களுக்குட்பட்டிருந்த ஏற்றுமதிகளின் உள்ளமைப்பு 1988 இல் சிறிதளவு மாற்றத்தினை மட்டும் காட்டியது. 1986 இல் அடையப்பட்ட நிலையை ஒத்ததாக ஏற்றுமதிகளின் முக்கிய வகையாகக் கைத்தொழில் ஏற்றுமதிகள் தொடர்ந்தும் விளங்கின. 1986 இல் ஏற்றுமதி விடயங்களில் தனியொரு பெரும் விடயமாக மாறிய புடவைகள் ஆடைகளின் பங்கு 1987 இன் 31 சதவீதத்திலிருந்து 1988 இல் 30 சதவீதத்திற்குச் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தபோதும் 1988 இலும் அது அதன் முதன்மை நிலையைத் தொடர்ந்தும் பேணியது. அதேவேளை 1977 இன் மொத்த ஏற்றுமதி வருவாய்களில் நான்கில் மூன்று பங்கிற்கு ஒன்று சேர்ந்து வகை கூறிய பெருந்தோட்ட வேளாண்மைப் பயிர்களின் பங்கு 1987 இன் 38 சதவீதத்திலிருந்து 1988 இல் 37 சதவீதத்திற்கு மேலும் வீழ்ச்சியடைந்தது. மறுபுறத்தில் கனிப்பொருள் ஏற்றுமதிகளின் பங்கு 1987 இற்கும், 1988 இற்குமிடையில் 4 சதவீதத்திலிருந்து 6 சதவீதத்திற்கு அதிகரித்தது.

**தேயிலை**

வேளாண்மை ஏற்றுமதிகளுள், தேயிலை தொடர்ந்தும் முக்கிய உற்பத்தியாக விளங்கி 1988 இன் மொத்த ஏற்றுமதிகளில் 26 சதவீதத்திற்கு வகை கூறியது. தேயிலை ஏற்றுமதிகளின் பெறுமதி 1987 இன் சிஎஉ 2,800 இலட்சத்திலிருந்து (ரூ. 106,540 இலட்சம்) 1988 இல் சிஎஉ 2,880 இலட்சத்திற்கு (ரூ. 122,990 இலட்சம்) உயர்ந்து 3 சதவீதங் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தது. பெறுமதியில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு ஏற்றுமதியின் அளவு 2,010 இலட்சம் கிலோக்கிரும்களிலிருந்து 2,200 இலட்சம் கிலோக்கிரும்களுக்கு 9 சதவீதத்தினால் அதிகரித்தமையே முழுக் காரணமாகும். யாருகச் சராசரி ஏற்றுமதி விலை கிலோக்கிருமிற்கு சிஎஉ 1.39 இலிருந்து கிலோக்கிருமிற்கு சிஎஉ 1.31 இற்கு 6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. எனினும் ரூபா தேய்வடைந்தமையின் விளைவாக ரூபா நியதிகளில் கொழும்பு ஏல விலையும், க.ஏ.பெ. விலையும் அதிகரித்தன. இலண்டன் ஏலங்களில் இலங்கைத் தேயிலைக்குப் பெறப்பட்ட சராசரி விலைகளும் கிலோக்கிருமிற்கு 105.21 பென்சுகளிலிருந்து கிலோக்கிருமிற்கு 99.30 பென்சுகளுக்கு 6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.

## அட்டவணை 1.31

## ஏற்றுமதிகளின் உள்ளமைப்பு 1986 — 1988

| வகை | பெறுமதி பத்து இலட்சம் ரூபாய்களில் | | | சி. எ. உ. பத்து இலட்சம் | | | மொத்த ஏற்றுமதிகளின் சதவீதம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1986 | 1987 | 1988 (ஈ) | 1986 | 1987 | 1988 | 1986 | 1987 | 1988 |
| 1. வேளாண்மை ஏற்றுமதிகள் .. | 15,764 | 17,437 | 20,104 | 479 | 458 | 470 | 46.3 | 42.4 | 42.8 |
| 1.1 தேயிலை .. | 9,253 | 10,654 | 12,299 | 281 | 280 | 288 | 27.2 | 25.9 | 26.2 |
| 1.2 இறப்பர் .. | 2,622 | 2,929 | 3,706 | 80 | 77 | 87 | 7.7 | 7.1 | 7.9 |
| 1.3 தெங்கு .. | 2,389 | 2,140 | 1,538 | 73 | 56 | 36 | 7.0 | 5.2 | 3.3 |
| 1.3.1 உள்ளீட்டுஉற்பத்திகள் .. | 1,609 | 1,423 | 895 | 49 | 37 | 21 | 4.7 | 3.5 | 1.9 |
| 1.3.2 ஏனையவை .. | 780 | 717 | 643 | 24 | 19 | 15 | 2.3 | 1.7 | 1.4 |
| 1.4 சிறு வேளாண்மை உற்பத்திகள் (அ) .. | 1,500 | 1,714 | 2,561 | 46 | 45 | 60 | 4.4 | 4.2 | 5.4 |
| 2. கைத்தொழில் ஏற்றுமதிகள் (அ) (ஆ) .. | 15,878 | 20,004 | 22,674 | 483 | 525 | 530 | 46.6 | 48.6 | 48.3 |
| 2.1 புடவையும் ஆடைகளும் .. | 9,629 | 12,897 | 14,260 | 293 | 339 | 333 | 28.3 | 31.3 | 30.4 |
| 2.2 பெற்றோலிய உற்பத்திகள் .. | 2,358 | 2,592 | 2,265 | 72 | 68 | 53 | 6.9 | 6.3 | 4.8 |
| 2.3 ஏனையவை .. | 3,891 | 4,515 | 6,148 | 118 | 118 | 144 | 11.4 | 11.0 | 13.1 |
| 3. கனிப்பொருள் ஏற்றுமதிகள் .. | 1,182 | 1,805 | 2,614 | 36 | 47 | 61 | 3.5 | 4.4 | 5.6 |
| 3.1 இரத்தினக் கற்கள் ... | 755 | 1,447 | 2,070 | 23 | 38 | 48 | 2.2 | 3.5 | 4.4 |
| 3.2 ஏனையவை ... | 427 | 358 | 543 | 13 | 9 | 13 | 1.3 | 0.9 | 1.2 |
| 4. பகுக்கப்படாதவைகள் (இ) ... | 1,249 | 1,886(உ) | 1,536 | 38 | 50 | 36 | 3.7 | 4.6 | 3.3 |
| மொத்த ஏற்றுமதிகள் (ஆ) ... | 34,072 | 41,133 | 46,928 | 1,036 | 1,080 | 1,097 | 100.0 | 100.0 | 100.0 |

(அ) தெரிந்தெடுக்கப்பட்ட விடயங்கள்.
(ஆ) சீராக்கப்பட்டவை.
(இ) மீள் ஏற்றுமதிகள் உட்பட.
(ஈ) தற்காலிகமானவை.
(உ) வான்கலம் ஒன்றின் ஏற்றுமதி உட்பட.

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்,
இலங்கை பெற்றோலியக்கூட்டுத்தாபனம்.
வரையறுக்கப்பட்ட எயர்லங்கா

மாற்றல் வீதங்கள்— 1986 1 சிஎஉ = ரூ. 32.8993
1987 1 சிஎஉ = ரூ. 38.1023
1988 1 சிஎஉ = ரூ. 42.7577

**இறப்பர்**

இறப்பர் ஏற்றுமதிகளின் பெறுமதி 1987 இன் சிஎஉ 770 இலட்சத்திலிருந்து (ரூ. 29,290 இலட்சம்) 1988 இல் சிஎஉ 870 இலட்சத்திற்கு (ரூ. 37,060 இலட்சம்) 13 சதவீதத்தினல் உயர்வடைந்தது. இதற்கு ஏற்றுமதி விலைகள் கிலோக்கிருமிற்கு சிஎஉ 0.73 இலிருந்து (ரூ. 27.63) கிலோக்கிருமிற்கு சிஎஉ 0.87 இற்கு (கிலோக்கிருமிற்கு ரூ. 37.33) 19 சதவீதத்தினல் உயர்வடைந்தமையே முழுக் காரணமாகும். 1987 இல் 4 சதவீதத்தினல் வீழ்ச்சியடைந்த இறப்பரின் ஏற்றுமதி அளவு 1988 இல் 990 இலட்சம் கிலோக்கிரும்களுக்கு 6 சதவீதத்தினல் மேலும் வீழ்ச்சியடைந்தது. இறப்பரிலிருந்தான மொத்த வருவாய்களில் தட்டை இறப்பர் 48 சதவீதத்திற்கு வகை கூறிய வேளையில் லேட்டெக்ஸ் கிறேப், கட்டி இறப்பர் என்பன முறையே 34 சதவீதத்திற்கும், 13 சதவீதத்திற்கும் வகை கூறின.

**தெங்கு**

தெங்கு உற்பத்தி ஏற்றுமதிகளிலிருந்தான மொத்த வருவாய்கள் 1987 இன் சிஎஉ 560 இலட்சத்திலிருந்து (ரூ. 21,400 இலட்சம்) 1988 இல் சிஎஉ 360 இலட்சத்திற்கு (ரூ. 15,380 இலட்சம்) 36 சதவீதத்தினல் மிகக் கூடுதலாக வீழ்ச்சியடைந்தமைக்கு ஏற்றுமதி அளவு 5,380 இலட்சங்களிலிருந்து 2,240 இலட்சம் காய்களுக்கு அல்லது 58 சதவீதத்தினல் மிகக் கடுமையாக வீழ்ச்சியடைந்தமையே காரணமாகும். தெங்கு வளரும் பிரதேசங்களில் 1986 ஆம் 1987 ஆம் ஆண்டுகளில் நிலவிய நீண்ட வரட்சியின் காரணமாக உற்பத்தியில் ஏற்பட்ட கடுமையான வீழ்ச்சியின் விளைவாக இது ஏற்பட்டது. 1987 இற்கும், 1988 இற்குமிடையில் சராசரி ஏற்றுமதி விலை காயொன்றிற்கு சிஎஉ 0.07 இலிருந்து (காயொன்றுக்கு ரூ. 2.64) காயொன்றிற்கு சிஎஉ 0.09 இற்கு (காயொன்றிற்கு ரூ. 4.00) 29 சதவீதத்தினல் அதிகரித்த சராசரி ஏற்றுமதி விலை, ஏற்றுமதி அளவில் ஏற்பட்ட வீழ்ச்சியின் பாதகமான தாக்கத்தினை ஈடுசெய்யப் போதுமானதாக இருக்கவில்லை. தெங்கு துணை உற்பத்திகளின் ஏற்றுமதிப் பெறுமதியும் தேங்காய், சிரட்டைக்கரி, நார்த்தும்பு மெத்தை, நாரிழை, கயிறு என்பனவற்றின் குறைவடைந்த வருவாய்களின் காரணமாக 20 சதவீதத்தினல் வீழ்ச்சியடைந்தது.

**சிறு வேளாண்மை உற்பத்திகள்**

1988 இல் சிறு வேளாண்மை ஏற்றுமதிகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்டது. இவ்வேற்றுமதிகளின் பெறுமதி 1987 இன் சிஎஉ 450 இலட்சத்திலிருந்து (ரூ. 17,140 இலட்சம்) 1988 இல் சிஎஉ 600 இலட்சத்திற்கு (ரூ. 25,610 இலட்சம்) 33 சதவீதத்திற்கும் கூடுதலான அளவில் (ரூபா நியதிகளில் 49 சதவீதம்) உயர்வடைந்தது. இதன் விளைவாக மொத்த ஏற்றுமதிகளில் சிறு வேளாண்மை உற்பத்திகளின் பங்கு 4 சதவீதத்திலிருந்து 5 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. இவற்றிடையே கறுவா, கராம்பு, கோப்பி, இன்றியமையாத எண்ணெய் என்பனவற்றின் வருவாய்களில் கணிசமான அதிகரிப்புக்கள் பதிவு செய்யப்பட்டன.

**கைத்தொழில் ஏற்றுமதிகள்**

1988 இல் கைத்தொழில் ஏற்றுமதிகளின் பெறுமதி 1987 இன் சிஎஉ 5,250 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் சிஎஉ 5,300 இலட்சமாக விளங்கி 1 சதவீதம் கொண்ட சிறிதளவு அதிகரிப்பினை மட்டும் பதிவு செய்தது. இது

முன்னைய ஆண்டின் 9 சதவீதங் கொண்ட வளர்ச்சிக்கு மாறானதாகும். 1988 இல் கைத்தொழில் ஏற்றுமதிகளின் வளர்ச்சி வீதம் வீழ்ச்சியைக் கொண்டிருந்தமைக்கு ஆடைகள் மற்றும் பெற்றோலிய ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்தமையே முக்கிய காரணமாகும். இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் புடவைகள் மற்றும் ஆடை ஏற்றுமதிகள் சஎஉ 3,390 இலட்சத்திலிருந்து சஎஉ 3,330 இலட்சத்திற்கு 22 சதவீதத்தினாலும் பெற்றோலிய ஏற்றுமதிகள் சஎஉ 680 இலட்சத்திலிருந்து சஎஉ 530 இலட்சத்திற்கு 2 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. ஆடை ஏற்றுமதிகளின் அளவு வீழ்ச்சியடைந்தமைக்கு வழமையாக வேலை செய்யும் தொழிற்சாலைகளைப் பாதித்த அதிகரித்த உள்நாட்டுக் குழப்பங்கள் முக்கிய காரணமாக இருந்தவேளையில் பெற்றோலிய ஏற்றுமதிகளின் பெறுமதி வீழ்ச்சியடைந்தமைக்கு விலைகள் 1987 இன் மெற்றிக் தொன்னொன்றுக்கு சஎஉ 106 இலிருந்து 1988 இல் மெற்றிக் தொன்னொன்றிற்கு சஎஉ 77 இற்குக் கடுமையாகக் குறைவடைந்தமையே காரணமாகும். எனினும் ஏனைய கைத்தொழில் உற்பத்திகளின் பெறுமதி 21 சதவீதத்தினால் அதிகரித்தமை பட்டை தீட்டப்பட்ட வைரங்கள், தோல், மற்றும் இறப்பர் உற்பத்திகள், கடல் உற்பத்திகள், இரசாயன உற்பத்திகள் என்பவற்றிலிருந்தான அதிகரித்த வருவாயைப் பிரதிபலித்தன. 1988 இல் வைரங்களின் ஏற்றுமதி மட்டும் 1987 இன் சஎஉ 310 இலட்சத்திலிருந்து (ரூ. 11,660 இலட்சம்) சஎஉ 380 இலட்சத்திற்கு (ரூ. 16,290 இலட்சம்) 25 சதவீதத்தினால் உயர்வடைந்தது.

**கனிப்பொருள் ஏற்றுமதிகள்**

கனிப்பொருள் ஏற்றுமதிகள் 1988 இலும் சஎஉ 470 இலட்சத்திலிருந்து (ரூ. 18,050 இலட்சம்) சஎஉ 610 இலட்சத்திற்கு (ரூ. 26,140 இலட்சம்) தொடர்ந்தும் விரிவடைந்து 29 சதவீதங் கொண்ட வரவேற்கத்தக்க வளர்ச்சியைப் பதிவு செய்தன. பெருமளவு அதிகரிப்புக்கள் இரத்தினக் கற்கள், இல்மனைட், இரும்பு பைறையிட் இயற்கைக் காரியம் போன்ற ஏனைய கனிப்பொருள் ஏற்றுமதிகளில் பதிவு செய்யப்பட்டன. இரத்தினக் கல் ஏற்றுமதிகள் சஎஉ 380 இலட்சத்திலிருந்து (ரூ. 14,470 இலட்சம்) சஎஉ 480 இலட்சத்திற்கு (ரூ. 20,700 இலட்சம்) மிகக் கூடியளவில் உயர்வடைந்தமைக்கு கெவுட உள்பட ஏற்றுமதிகளின் அளவு 1987 இன் 54 இலட்சம் கரட்டிலிருந்து 1988 இல் 156 இலட்சம் கரட்டுகளுக்கு அதிகரித்தமையே பெருமளவிற்குக் காரணமாகும். யப்பான், தாய்லாந்து, ஐக்கிய அமெரிக்க நாடுகள், கொங்கொங் ஆகியன இரத்தினக் கல் ஏற்றுமதிகளுக்கான முக்கிய சந்தைகளாக விளங்கின. ஏனைய கனிப்பொருள் ஏற்றுமதிகள் சஎஉ 90 இலட்சத்திலிருந்து (ரூ. 3,580 இலட்சம்) சஎஉ 130 இலட்சத்திற்கு (ரூ. 5,430 இலட்சம்) 44 சதவீதத்தினால் அதிகரித்தன. இவற்றில், ஏனைய கனிப்பொருள் ஏற்றுமதிகளில் 35 சதவீதத்திற்கு வகைகூறும் உலோகத் தாதுகளினதும் இரும்பு பைறைட்டுக்களினதும் பெறுமதி சஎஉ 10 இலட்சத்திலிருந்து (ரூ. 470 இலட்சம்) சஎஉ 40 இலட்சத்திற்கு (ரூ. 1,890 இலட்சம்) மிகக் கூடுதலாக உயர்வடைந்த வேளையில் இயற்கைக் காரியத்தின் பெறுமதி சஎஉ 30 இலட்சத்திலிருந்து (ரூ. 1,360 இலட்சம்) சஎஉ 40 இலட்சத்திற்கு (ரூ. 1,660 இலட்சம்) அதிகரித்தது.

**இறக்குமதிகள்**

சீராக்கப்பட்ட சுங்கத் தரவுகளின்படி 1988 இல் இறக்குமதிகளின் மீதான மொத்தச் செலவினம் 1987 இன் சஎஉ 15,890 இலட்சத்துடன் (ரூ. 605,280 இலட்சம்) ஒப்பிடுகையில் சஎஉ 16,650 இலட்சமாக (ரூ. 712,000 இலட்சம்) விளங்கி சஎஉ நியதிகளில் 5 சதவீதங் கொண்ட அதிகரிப்பினையும் ரூபா நியதிகளில் 18 சதவீதங் கொண்ட அதிகரிப்பினையும் காட்டியது. அதிகரிப்பு முக்கியமாக அரிசி, சீனி, பால், பால் உற்பத்திகள் போன்ற நுகர்வுப் பொருட்களின் இறக்குமதியிலும் கோதுமைத் தானியம், வளமாக்கி போன்ற இடைநிலைப் பொருட்களின் இறக்குமதியிலும் பிரதிபலித்தது.

அட்டவணை 1.32

## இறக்குமதிகளின் முடிவுப் பயன்பாட்டுப் பகுப்பு 1986—1988

| வகை | பெறுமதி பத்து இலட்சம் ரூபாய்களில் | | | சிஎஉ பத்து இலட்சம் | | | மொத்தத்தின் சதவீதம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1986 | 1987 (அ) | 1988 (ஆ) | 1986 | 1987 | 1988 | 1986 | 1987 | 1988 |
| 1. நுகர்வுப் பொருட்கள் ... | 12,256 | 13,814 | 17,425 | 372.5 | 362.5 | 407.5 | 22.5 | 22.8 | 24.5 |
| 1.1 உணவும் குடிபானமும் ... | 6,746 | 7,462 | 10,201 | 205.0 | 195.8 | 238.6 | 12.4 | 12.3 | 14.3 |
| 1.1.1 அரிசி ... | 1,052 | 687 | 1,795 | 32.0 | 18.0 | 42.0 | 1.9 | 1.1 | 2.5 |
| 1.1.2 மா ... | 90 | 96 | 303 | 2.7 | 2.5 | 7.1 | 0.2 | 0.2 | 0.4 |
| 1.1.3 சீனி ... | 1,764 | 2,389 | 2,927 | 53.6 | 62.7 | 68.5 | 3.2 | 3.9 | 4.1 |
| 1.2 ஏனையவை ... | 5,510 | 6,353 | 7,225 | 167.5 | 166.7 | 169.0 | 10.1 | 10.5 | 10.1 |
| 2. இடைநிலைப் பொருட்கள் (ஈ) ... | 28,618 | 34,619 | 40,508 | 869.9 | 908.6 | 947.4 | 52.4 | 57.2 | 56.9 |
| 2.1 பெற்றோலியம் ... | 6,293 | 8,716 | 7,839 | 191.3 | 228.7 | 183.3 | 11.5 | 14.4 | 11.0 |
| 2.2 வளமாக்கி ... | 1,282 | 1,299 | 2,476 | 39.0 | 34.1 | 57.9 | 2.4 | 2.1 | 3.5 |
| 2.3 இரசாயனம் ... | 1,587 | 1,559 | 1,887 | 48.2 | 40.9 | 44.1 | 2.9 | 2.6 | 2.6 |
| 2.4 கோதுமை ... | 2,371 | 1,923 | 2,983 | 72.1 | 50.5 | 69.8 | 4.4 | 3.2 | 4.2 |
| 2.5 புடவைகளும் ஆடையும் (ஈ) ... | 6,353 | 8,086 | 8,796 | 193.1 | 212.2 | 205.7 | 11.5 | 13.4 | 12.3 |
| 3. முதலீட்டுப் பொருட்கள் ... | 10,556 | 11,334 | 12,081 | 320.9 | 297.5 | 282.5 | 19.4 | 18.7 | 17.0 |
| 3.1 பொறியும் கருவியும் ... | 5,828 | 6,640 | 7,047 | 177.1 | 174.3 | 164.8 | 10.7 | 11.0 | 9.9 |
| 3.2 போக்குவரத்துக் கருவி ... | 1,457 | 1,418 | 1,409 | 44.3 | 37.2 | 32.9 | 2.7 | 2.3 | 2.0 |
| 3.3 கட்டடப் பொருட்கள் ... | 907 | 710 | 1,038 | 27.6 | 18.6 | 24.3 | 1.7 | 1.2 | 1.5 |
| 4. பகுக்கப்படாதவை ... | 3,129 | 761 | 1,186 | 95.1 | 20.0 | 27.7 | 5.7 | 1.3 | 1.6 |
| மொத்த இறக்குமதிகள் (இ) ... | 54,559 | 60,528 | 71,200 | 1,658.4 | 1,588.6 | 1,665.2 | 100.0 | 100.0 | 100.0 |

(அ) திருத்தப்பட்டவை.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) சீராக்கப்பட்டது.
(ஈ) முன்னர் நுகர்வுப் பொருட்களாகப் பாகுபடுத்தப்பட்ட புடவை ஆடைகளின் இறக்குமதிகள் தற்பொழுது இடைநிலைப்பொருட்களாகப் பாகுபடுத்தப்படுகின்றன.

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்,
உணவு ஆணையாளர் திணைக்களம்,
இலங்கை வளமாக்கிக் கூட்டுத்தாபனமும்
ஏனைய முதன்மை வளமாக்கி இறக்குமதியாளர்களும்,
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,
இலங்கை மத்திய வங்கி.

முன்னைய ஆண்டினைப்போன்றே மொத்த இறக்குமதியில் நுகர்வுப் பொருட்களின் பங்கு தொடர்ந்தும் அதிகரித்து 23 சதவீதத்திலிருந்து 25 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. மாறாக முதலீட்டுப் பொருட்களின் பங்கு 1987 இன் 19 சதவீதத்திலிருந்து 1988 இல் 17 சதவீதத்திற்குக் குறைவடைந்தவேளையில் இடைநிலைப் பொருட்களின் பங்கு ஏறத்தாள முன்னைய ஆண்டின் அதே மட்டமாகிய 57 சதவீதத்தில் இருந்தது.

**நுகர்வுப் பொருட்கள்**

நுகர்வுப் பொருட்களின் மீதான இறக்குமதிச் செலவு 1987 இன் சிஎஉ 3,630 இலட்சத்திலிருந்து (ரூ. 138,140 இலட்சம்) 1988 இல் சிஎஉ 4,080 இலட்சத்திற்கு (ரூ. 174,250 இலட்சம்) 12 சதவீதத்தினல் உயர்வடைந்தமைக்கு நுகர்வுப் பொருள் இறக்குமதிகளின் அனைத்துவகைகளின் மீதான செலவினத்தில் அதிகரிப்புக்கள் ஏற்பட்டமையே காரணமாகும். அரிசி இறக்குமதி மீதான செலவினம் சிஎஉ 180 இலட்சத்திலிருந்து (ரூ. 6,870 இலட்சம்) சிஎஉ 420 இலட்சத்திற்கு (ரூ. 17,950 இலட்சம்) இரண்டு மடங்கிற்கும் கூடுதலாக அதிகரித்தமைக்கு அளவு 113,000 மெற்றிக் தொன்களிலிருந்து 210,000 மெற்றிக் தொன்களுக்கு 86 சதவீதத்தினலும் விலைகள் 25 சதவீதத்தினலும் அதிகரித்தமையே காரணமாகும். அதேவேளை சீனியின் இறக்குமதி அளவில் 15 சதவீத வீழ்ச்சி காணப்பட்டபோதும் சீனியின் இறக்குமதிப் பெறுமதி சிஎஉ 690 இலட்சத்திற்கு (ரூ. 29,270 இலட்சம்) 9 சதவீதத்தினல் உயர்வடைந்தமைக்கு விலைகள் 29 சதவீதத்தினல் அதிகரித்தமையே காரணமாகும். பால், பால் உற்பத்திகளின் இறக்குமதிப் பெறுமதியும் 1987 இன் சிஎஉ 330 இலட்சத்திலிருந்து 1988 இல் சிஎஉ 450 இலட்சத்திற்கு 35 சதவீதத்தினல் மிகக் கூடுதலாக உயர்வடைந்தது. எனினும் ஏனைய நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிப் பெறுமதிகள் சிஎஉ 1,670 இலட்சத்திலிருந்து சிஎஉ 1,690 இலட்சத்திற்கு 1 சதவீதத்தினல் மாத்திரம் உயர்வடைந்தன.

**இடைநிலைப் பொருட்கள்**

இடைநிலைப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் 1987 இன் சிஎஉ 9,090 இலட்சத்துடன் (ரூ. 346,190 இலட்சம்) ஒப்பிடுகையில் 1988 இல் சிஎஉ 9,470 இலட்சமாக (ரூ. 405,080 இலட்சம்) விளங்கி சிஎஉ நியதிகளில் 4 சதவீதங் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தது. இதற்கு வளமாக்கி, கோதுமைத் தானியம், இரசாயனம் என்பனவற்றின் அளவும் விலைகளும் அதிகரித்தமையே பெருமளவிற்குக் காரணமாகும். வளமாக்கி இறக்குமதியின் மீதான செலவினம் சிஎஉ 580 இலட்சத்திற்கு (ரூ. 24,760 இலட்சம்) 70 சதவீதத்தினல் மிக அதிகளவில் உயர்வடைந்தமைக்கு அளவு 373,000 மெற்றிக் தொன்களிலிருந்து 556,000 மெற்றிக் தொன்களுக்குக் கணிசமாக அதிகரித்தமையும் விலைகளில் ஏற்பட்ட 14 சதவீத அதிகரிப்புமே காரணங்களாகும். கோதுமைத் தானியத்தின் இறக்குமதிப் பெறுமதி சிஎஉ 510 இலட்சத்திலிருந்து (ரூ. 19,230 இலட்சம்) சிஎஉ 700 இலட்சத்திற்கு (ரூ. 29,830 இலட்சம்) 38 சதவீதத்தினல் உயர்வுற்றமைக்கு அளவு 6 சதவீதத்தினலும் விலை 30 சதவீதத்தினலும் அதிகரித்தமையே காரணமாகும். இரசாயன உற்பத்திகளின் மீதான இறக்குமதிச் செலவினம் சிஎஉ 410 இலட்சத்திலிருந்து (ரூ. 15,590 இலட்சம்) சிஎஉ 440 இலட்சத்திற்கு (ரூ. 18,870 இலட்சம்) அல்லது 8 சதவீதத்தினல் அதிகரித்தது.

அட்டவணை 1.33

## முக்கிய இறக்குமதிகளின் அளவு — 1988

மெற்றிக் தொன்கள்

| மாதம் | அரிசி | கோதுமை | சீனி | பெற்றோலியம் (மசகு எண்ணெய்) | வளமாக்கி |
|---|---|---|---|---|---|
| சனவரி ... | 20,101 | 55,000 | 47,636 | 159,882 | 19,524 |
| பெப்புருவரி ... | 30,527 | 55,336 | 25,970 | 137,180 | 62,716 |
| மாச்சு ... | 34,710 | 63,004 | 28,382 | 124,608 | 57,348 |
| ஏப்பிறல் ... | 22,861 | 101,743 | 14,800 | 191,153 | 48,103 |
| மே ... | 20,014 | 11,034 | 11,521 | 129,216 | 53,477 |
| யூன் ... | 30,188 | 52,265 | 28,653 | 151,934 | 58,371 |
| யூலை ... | 16,008 | 48,699 | 17,955 | 165,001 | 68,358 |
| ஓகத்து ... | 16,524 | 62,732 | 32,105 | 293,876 | 39,604 |
| செத்தெம்பர் ... | 10,030 | 6,355 | 21,404 | 157,188 | 37,138 |
| ஒற்ரோபர் ... | 4,119 | 52,289 | 15,995 | 127,447 | 50,570 |
| நவெம்பர் ... | 77 | 47,967 | 19,051 | 127,315 | 37,111 |
| திசெம்பர் ... | 5,265 | 55,657 | 55,487 | 129,335 | 23,446 |
| மொத்தம் (அ) ... | 210,424 | 612,081 | 318,959 | 1,894,135 | 555,766 |

(அ) சீராக்கப்பட்டது,

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்,
உணவு ஆணையாளர் திணைக்களம்,
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,
இலங்கை வளமாக்கிக் கூட்டுத்தாபனமும்.
ஏனைய முக்கிய வளமாக்கிஇறக் குமதியாளர்களும்.

இவ்வதிகரிப்புக்கள் காணப்பட்டபோதும், பெற்றோலிய உற்பத்திகள், புடவை மற்றும் ஆடை இறக்குமதிகளின் மீதான செலவினம் குறைவடைந்தமையின் காரணமாக 1988 இல் இடைநிலைப் பொருட்களின் இறக்குமதி வளர்ச்சி கட்டுப் படுத்தப்பட்டது. பெற்றோலிய இறக்குமதிகளின் மீதான செலவினம் 20 சத வீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு விலைகள் பீப்பாயொன்றுக்கு சிஎஉ 14 இலிருந்து சிஎஉ 11 இற்கு 21 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமையே காரண மாகும். புடவைகள் மற்றும் ஆடைகள் இறக்குமதியின் பெறுமதி சிஎஉ 2,120 இலட்சத்திலிருந்து சிஎஉ 2,060 இலட்சத்திற்கு 3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந் தமைக்கு ஆடை ஏற்றுமதிகளின் அளவு குறைந்தமை முக்கிய காரணமாகும்.

### முதலீட்டுப் பொருட்கள்

முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் 1987 இன் சிஎஉ 2,970 இலட்சத்திலிருந்து (ரூ. 113,340 இலட்சம்) 1988 இல் சிஎஉ 2,830 இலட்சத்திற்கு (ரூ. 120,810 இலட்சம்) 5 சதவீதத்தினால் வீழ்ச்சி

யடைந்தது. இதற்குப் போக்குவரத்துக் கருவிகள் மற்றும் பொறித்தொகுதியின் இறக்குமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சி பெருமளவிற்குக் காரணமாக இருந்ததுடன் முதலீட்டு நடவடிக்கைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியையும் இது பிரதிபலித்தது. போக்குவரத்துக் கருவிகளின் இறக்குமதிப் பெறுமதி சஎஉ 370 இலட்சத்திலிருந்து சஎஉ 330 இலட்சத்திற்கு அல்லது 12 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தவேளையில் பொறித்தொகுதியின் இறக்குமதிப் பெறுமதி சஎஉ 1,740 இலட்சத்திலிருந்து சஎஉ 1,650 இலட்சத்திற்கு அல்லது 5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. எனினும் கட்டிடப் பொருட்களின் இறக்குமதிப் பெறுமதி சஎஉ 190 இலட்சத்திலிருந்து சஎஉ 240 இலட்சத்திற்கு 31 சதவீதத்தினால் மிகக் கூடுதலாக உயர்வடைந்தது.

## வெளிநாட்டு வர்த்தகக் கொள்கை

1988 இல் ஏற்றுமதிகளை முன்னேற்றும் நோக்கில் தீர்வை அமைப்பிற்கும் இறக்குமதி ஒழுங்கு முறைகளுக்கும் பல திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. 1977 இல் தொடங்கப்பட்ட தாராளமயப்படுத்தலின் விரிவான கொள்கைகள் மாறாதிருந்தன.

## தீர்வைகள்

இவ்வாண்டில் தேயிலை மீதான ஏற்றுமதித் தீர்வை இரு முறை திருத்தப்பட்டது. யூனில் செய்யப்பட்ட முதலாவது திருத்தத்தில் உறைகளிலடைக்கப்பட்ட தேயிலை மீதான தீர்வை கிலோக்கிராம் ஒன்றிற்கு ரூ. 2 இலிருந்து கிலோக்கிராம் ஒன்றிற்கு ரூ. 3 இற்கு உயர்த்தப்பட்ட வேளையில் தேயிலைப் பொதிகள் மீது கிலோக்கிராம் ஒன்றிற்கு ரூ. 1 தீர்வை விதிக்கப்பட்டது. இதன் பின்னர் நவெம்பரில், தேயிலை ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்காகத் தொகை வடிவிலான தேயிலை, உறைகளிலடைக்கப்பட்ட தேயிலை, உடன் தேயிலை என்பன மீதான தீர்வை கிலோவொன்றுக்கு ரூ. 2 ஆல் குறைக்கப்பட்டது. இதேவேளை தேயிலைப் பொதி ஏற்றுமதி மீது முன்னர் விதிக்கப்பட்ட கிலோ ஒன்றுக்கு ரூ. 1 என்ற தீர்வை கிலோ ஒன்றுக்கு ரூ. 0.50 ஆகக் குறைக்கப்பட்டது. பெறுமான விகித விற்பனை வரியின் கணிப்பிற்கான தேயிலையின் குறைந்தமட்ட விலை 1988 மாச்சில் வரி விதிக்கத்தக்க விலையின் மட்டத்தினை கிலோகிராம் ஒன்றுக்கு ரூ. 40 இலிருந்து ரூ. 44 இற்கு உயர்த்துவதன் மூலம் திருத்தியமைத்த வேளையில் வரி வீதம் வரி விதிக்கத்தக்க மட்டத்திற்கு மேல் 50 சதவீதமாக மாற்றமின்றி இருந்தது. இறப்பர் ஏற்றுமதிகள் மீதான தீர்வைகளும் 1988 நவெம்பரில் கிலோ ஒன்றுக்கு 15 சதத்திலிருந்து 25 சதத்திற்கு உயர்த்தப்பட்டன.

## இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாடு

நகை ஏற்றுமதிகளை முன்னேற்றும் நோக்கில் வைரங்கள், முத்துக்கள், வெள்ளி, பிளாத்தினம், போலி நகைகள் என்பன உட்பட்ட 17 விடயங்களின் இறக்குமதி இவ்வாண்டில் தாராளமாக்கப்பட்டது. இவ்வாண்டில் சோளத்தினதும், உந்து ஊர்திகளின் உடற் சட்டங்களினதும் இறக்குமதி அனுமதி உரிமக் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவரப்பட்டது.

**வர்த்தக ஒழுங்குகள்**

1988 இல், பன்னாட்டு வர்த்தக ஒழுங்குகள் துறையில் குறிப்பிடத்தக்க அபிவிருத்திகள் காணப்பட்டன. பல்லிழை ஒழுங்கின் கீழ் இலங்கை இரண்டு இருபுடை புடவை உடன்படிக்கைகளைச் சுவீடனுடனும் ஐக்கிய அமெரிக்க நாடுகளுடனும் செய்து கொண்டது. இவை முறையே 5 ஆண்டுகளையும், 4 ஆண்டுகளையும் செல்லுபடிக் காலமாகக் கொண்டிருந்தன. இலங்கை துருக்கியுடன் இரு நாடுகளுக்குமிடையே வர்த்தக, பொருளாதாரத் தொடர்புகளை முன்னேற்றும் நோக்கில் இருபுடை வர்த்தக உடன்படிக்கை ஒன்றை 1988 ஓகத்தின் முதன் முறையாக நிறைவு செய்தது. இதேவேளை 1987 நவெம்பரில் இலங்கை பாக்கித்தானுடன் செய்து கொண்ட சிறப்பு வர்த்தக ஒழுங்கு 1988 நவெம்பரில் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. கனடா, ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகள், நோர்வே, பின்லாந்து போன்ற முதன்மை அபிவிருத்தியடைந்த நாடுகட்கான ஆடைகள் ஏற்றுமதி தொடர்பாக அனுமதிப் பங்குக் கட்டுப்பாடுகளை இலங்கை தொடர்ந்து மேற்கொண்டது.

ஆய்வுக்குரிய ஆண்டில் இலங்கை பாங்கொக் உடன்படிக்கை, வர்த்தக முன்னுரிமைகளின் உலகளாவிய அமைப்பு, உருகுவே சுற்றுப்பேச்சுக்கள் போன்ற வர்த்தகப் பேச்சுவார்த்தைகள் மீதான பல முக்கிய கூட்டங்களில் இலங்கை பங்கு கொண்டது.

பன்னாட்டு பண்ட உடன்படிக்கைகள் தொடர்பாகப் பல அங்கத்துவ நாடுகள் 1987 இல் செய்யப்பட்ட புதிய பன்னாட்டு இயற்கை இறப்பர் உடன்படிக்கை (பஇஇஉ 2) ஒன்றுக்கான உறுதிப்பாட்டைக் கொடுத்தன. எனினும் 1988 இறுதி வரை இவ்வுடன்படிக்கையில் தனது அங்கத்துவம் பற்றிய முடிவை இலங்கை எடுக்கவில்லை. புதிய உடன்படிக்கையானது அடிப்படையில் பன்னாட்டு இயற்கை இறப்பர் உடன்படிக்கையினைப் போலவே 'தாங்கிருப்பு' தொழிற்பாட்டின் மூலமான ஒரு விலை உறுதிப்பாட்டு உடன்படிக்கையாகும். எடுத்துரைக்கப்பட்ட பன்னாட்டுத் தேயிலை உடன்படிக்கை தொடர்பாக இவ்வாண்டில் இறக்குமதி ஏற்றுமதி செய்யும் நாடுகளுக்கிடையில் இரண்டு முறைசாரா கலந்தாலோசனைகள் காணப்பட்டபோதிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை. பன்னாட்டு கோப்பி அமைப்பின் கீழ் இலங்கை 1988 செத்தெம்பரில் முடிவடைந்த 1987–88 கோப்பி ஆண்டிற்கு 59,148 உறைகள் அல்லது 3,549 மெற்றிக் தொன்கள்கொண்ட அனுமதிப் பங்கினையும், 1988–89 அனுமதிப் பங்கு ஆண்டுக்கு 56,448 உறைகள் அல்லது 3,386 மெற்றிக் தொன்கள் கொண்ட அனுமதிப் பங்கையும் பெற்றது.

**உள்நாட்டு வர்த்தகம்**

வர்த்தகத்தை வழிநடத்துவதற்குச் சந்தை விசைகளை அனுமதிப்பதனை உள் நாட்டு வர்த்தகக் கொள்கைகள் தொடர்ந்தும் வலியுறுத்தின. இதன்படி 1988 இல் போட்டியை அதிகரிப்பதற்காக அரசின் தலையீட்டை ஆகக் குறைந்தளவில் பேணியதுடன் பொருட்கள் பணிகளின் வர்த்தகம் தொடர்பான மொத்த விற்பனை, சில்லறை விற்பனை, ஏனைய நடவடிக்கைகள் என்பவற்றில் தனியார்துறையின் பங்குபற்றலுக்கு ஊக்கமளிக்கப்பட்டது.

1987 ஒகத்தில் நிறுவப்பட்ட நியாய வர்த்தக ஆணைக்குழு தேசிய விலையிடல் கொள்கையினை வடிவமைக்கவும் செயற்படுத்தவும் பொறுப்பாகவுள்ளதுடன் தனியுரிமைகள், இணைப்புக்கள், போட்டிக்கெதிரான வழிமுறைகள் ஆகியவற்றின் கட்டுப்பாடுகள் தொடர்பான அதன் கடமைகளையும் மேற்கொண்டது. இவ்வாணைக்குழு 1987 இன் 52 இற்கு எதிராக 1988 இல் 95 விலை மீளாய்வுகளை மேற்கொண்டது. இவ்விலை மீளாய்வுகள் நுகர்வோர், உற்பத்தியாளர் ஆகிய இருவரினதும் நலன்களைப் பாதுகாப்பதையே முக்கிய இலக்காகக் கொண்டிருந்தன.

முன்னைய ஆண்டுகளைப் போலவே 'மகாபொல' வர்த்தக சந்தைகளையும் நுகர்வோர் அமைப்புக்களையும் ஒழுங்குபடுத்துவதன் மூலம் நுகர்வோர் அறிவாற்றலை அதிகரிப்பதில் கவனம் செலுத்தப்பட்டது. 1988 இல் மொத்தம் 13 'மகாபொல' வர்த்தக சந்தைகள் நடாத்தப்பட்டவேளையில் நாடு முழுவதும் 4,535 புதிய நுகர்வோர் அமைப்புக்கள் அமைக்கப்பட்டன.

அரச வர்த்தக அமைப்புக்கள் வர்த்தகச் சூழலின் மாறுபடும் தேவைகளுக்கு ஏற்பத் தங்கள் நடவடிக்கைகளைப் பன்முகப்படுத்துவதன் மூலம் தனியார்துறையுடன் தொடர்ந்தும் போட்டியிட்டன. குறிப்பாக, கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் சந்தையில் போதியளவு நிரம்பலை உறுதிப்படுத்துவதற்காக இன்றியமையாத பண்டங்களின் தாங்கிருப்புக்களைப் பேணுவதில் முக்கிய பங்கை வகித்தது.

இன்றியமையாத நுகர்வுத் தேவைகளை வழங்குவதில் நன்கமைந்த அமைப்பு என்ற கூட்டுறவுச் சங்கங்களின் முக்கியத்துவத்தை உள்ளூர்க் குழப்பகாலங்களின் போது காணக்கூடியதாக இருந்தது. முன்னைய ஆண்டுகளைப் போல உணவு முத்திரைத் திட்டத்தின் கீழ் நுகர்வுப் பண்டங்களின் வழங்கலை இவை கையாண்டன.

**சுற்றுலா**

1983 ஆம் ஆண்டிலிருந்தும் வீழ்ச்சியைக் கொண்டிருந்த சுற்றுலாக் கைத்தொழில் திடீரெனத் தோன்றிய உள்நாட்டுக் குழப்பங்களைத் தொடர்ந்து ஆய்விற்குரிய ஆண்டில் தொடர்ந்தும் கீழ் மட்டத்தில் காணப்பட்டது. 1988 இன் நடுப்பகுதியில் ஆண்டின் எஞ்சிய காலத்திற்கான சுற்றுலா விடுதிகளின் ஒதுக்குகள் 1987 இனைவிட விரைவாக அதிகரித்தவேளையில் இக்கைத்தொழில் மீட்சிபெறுவதற்கான சில அறிகுறிகள் காணப்பட்டபோதும், ஆண்டின் இறுதிக் காலாண்டில் மீண்டும் அதிகரித்த குழப்ப நிலைமைகள் எதிர்பார்க்கப்பட்ட வளர்ச்சியை நிறுத்திவிட்டன. 1988 இல் மொத்தச் சுற்றுலா வருகைகள் 182,662 ஆக விளங்கி ஏறத்தாழ முன்னைய ஆண்டின் அதே மட்டத்திலேயே இருந்தன. இது 1986 இன் வருகைகளைவிட 21 சதவீதம் குறைவானதாகவும், 1982 இல் பதிவு செய்யப்பட்ட உச்ச மட்டச் சுற்றுலா வருகையான 407,230 உடன் ஒப்பிடுகையில் 55 சதவீதம் குறைவானதாகவும் விளங்கியது.

அட்டவணை 1.34

## சுற்றுலாப் புள்ளி விபரங்கள் 1987 – 1988

| விடயம் | 1987 | 1986 இனைவிட % மாற்றம் | 1988 | 1987 இனைவிட % மாற்றம் |
|---|---|---|---|---|
| 1. சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் ... | 182,620 | — 20.6 | 182,662 | ... |
| 2. இன்பப் பயணிகளின் வருகைகள் ... | 2,417 | — 61.4 | 6,108 | + 152.7 |
| 3. பயணி இரவுகள் ('000) ... | 2,414 | — 3.9 | 2,305 | — 4.5 |
| 4. மொத்த சுற்றுலாப் பெறுகைகள் | | | | |
| 4.1 ரூபா பத்து இலட்சங்களில் ... | 2,415.2 | + 5.0 | 2,500.0(அ) | + 3.5 |
| 4.2 ஐ.அ. டொலர் பத்து இலட்சம் ... | 82.0 | — 0.1 | 78.6 | — 4.1 |
| 4.3 சி.எ.உ. பத்து இலட்சம் ... | 63.4 | — 9.3 | 58.5 | — 7.7 |
| 5. நோக்கங்களின்படியான வரவுகளின் எண்ணிக்கை | | | | |
| 5.1 களியாட்டம் ... | 162,782 | — 24.7 | 165,074 | + 1.4 |
| 5.2 வியாபாரம் ... | 14,356 | + 42.4 | 13,670 | — 4.8 |
| 6. பிரதேச அடிப்படையிலான வருகைகளின் எண்ணிக்கை | | | | |
| 6.1 மேற்கு ஐரோப்பா ... | 121,112 | — 15.3 | 111,426 | — 8.0 |
| 6.2 ஆசியா ... | 43,462 | — 34.3 | 53,712 | + 23.6 |
| 6.3 வட அமெரிக்கா ... | 7,166 | — 22.4 | 6,534 | — 8.8 |
| 7. மொத்த தொழில் வாய்ப்பு ... | 48,811 | — 8.7 | 47,232 | — 3.2 |
| 7.1 நேரடியாக ... | 20,338 | — 8.7 | 19,680 | — 3.2 |
| 7.2 மறைமுகமாக ... | 28,473 | — 8.7 | 27,552 | — 3.2 |

(அ) தற்காலிகமானவை. மூலம்: இலங்கை சுற்றுலாச் சபை..

எனினும், 1988 இல் ஆசியா மற்றும் கிழக்கு ஐரோப்பாவிலிருந்தான சுற்றுலா வருகைகள் அதிகரிப்புக்களைக் காட்டியவேளையில் மேற்கு ஐரோப்பா, வட அமெரிக்கா, அவுத்திரலாசியா என்பனவற்றிலிருந்தான வருகைகள் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தன. தொடர்ந்தும் முதன்மைச் சந்தையாக விளங்கிவரும் மேற்கு ஐரோப்பாவிலிருந்தான வருகைகள் மொத்த வருகைகளில் 61 சதவீதத்திற்கு வகை கூறி 1987 இன் 121,112 வருகையிலிருந்து 1988 இல் 111,426 இற்குக் குறைவடைந்து 8 சதவீதங் கொண்ட வீழ்ச்சியைப் பதிவு செய்தது. அதேவேளை இரண்டாவது பெரும் சந்தையான ஆசியாவிலிருந்தான வருகைகள் 24 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு யப்பான் மற்றும் இந்தியாவிலிருந்தான வருகைகள் முறையே 28 சதவீதத்தினாலும், 20 சதவீதத்தினாலும் அதிகரித்தமையே முக்கிய காரணமாகும். வட அமெரிக்கா, அவுத்திரலாசியா போன்ற ஏனைய முக்கிய சந்தைகளிலிருந்தான வருகைகள் முறையே 9 சதவீதத்தினாலும், 10 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தவேளையில் கிழக்கு ஐரோப்பாவிலிருந்தான வருகைகள் 7 சதவீதத்தினால் அதிகரித்தன.

இலங்கைச் சுற்றுலாச் சபையின்படி, 1988 இல் சுற்றுலாவிலிருந்தான மதிப்பிடப்பட்ட மொத்த வெளிநாட்டுச் செலாவணி வருவாய்கள் ரூ. 25,000 இலட்சங்களாக விளங்கி (சிஎஉ590 இலட்சம்) சிஎஉ நியதிகளில் 8 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தன. 1982 இன் சிஎஉ 1,330 இலட்சங் கொண்ட உச்ச மட்ட வருவாய்களுடன் ஒப்பிடுகையில் ஆய்விற்குரிய ஆண்டின் வருவாய்கள் சிஎஉ நியதிகளில் 56 சதவீதங் கொண்ட வீழ்ச்சியைக் காட்டின.

சுற்றுலாக் கைத்தொழிலில் தொழில் வாய்ப்புக்கள் 1988 இல் தொடர்ந்து மேலும் வீழ்ச்சியடைந்தன. இத்துறையிலுள்ள ஊழியர்களின்மொத்த எண்ணிக்கை 1987 இன் 48,811 இலிருந்து 1988 இல் 47,232 இற்கு வீழ்ச்சி யடைந்திருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இம்மொத்தத்தில் ஏறத்தாள 19,680 பேர் நேரடியாக இத்தொழிலில் ஈடுபட்டிருந்தவேளையில் ஏறத்தாள 27,552 பேர் துணைத்துறைகளில் தொழில் பெற்றிருந்தனர்.

1988 இல் தரமிடப்பட்ட தங்குமிடவகையில் தொழிற்பட்ட சுற்றுலா விடுதி அலகுகளின் எண்ணிக்கை முன்னைய ஆண்டினைப்போன்று 128 ஆக இருந்தது. எனினும் மொத்த அறை இயலளவு 1987 இன் 9,921 அறைகளிலிருந்து 1988 இல் 9,977 அறைகளுக்குச் சிறிதளவால் அதிகரித்தது. அதேவேளையில் தரமிடப் பட்ட சுற்றுலா விடுதிகளில் அறைகளில் தங்கும் சராசரி வீதம் 1987 இன் 31.5 சதவீதத்திலிருந்து 1988 இல் 32.1 சதவீதத்திற்குச் சிறிதளவால் உயர் வடைந்தமைக்குக் கொழும்பு மாநகரம், கொழும்பு பெரும்பாகம், பண்டைய நகரப் பகுதிகள் என்பனவற்றின் அதிகரித்த பயன்பாடே காரணமாகும். துணைத் தங்குமிடத்துறையில் அலகுகளின் எண்ணிக்கை 1987 இன் 104 இலிருந்து 1988 இல் 85 இற்கு 18 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து மொத்த அறைகளின் எண்ணிக்கையை 1,172 இலிருந்து 936 இற்குக் குறைத்தது.

1983 ஆம் ஆண்டிலிருந்து சுற்றுலாத்துறைக்கு அரசினால் வழங்கப்பட்ட நிவாரண வழிமுறைகள் 1988 ஆம் ஆண்டு முழுவதும் தொடர்ந்தும் நடைமுறை யிலிருந்தன. இவ்வழிமுறைகள் கடன்களின் 100 சதவீதமான மீள் அட்டவணைப் படுத்தலுடன் 1989 மாச்சு வரை நீடிக்கப்பட்ட கடன்களை மீளச் செலுத்துவதற் கான சட்டரீதியான கால அவகாசத்தையும் பாதிக்கப்பட்ட சுற்றுலா விடுதிகளின் தொழிற்படு மூலதனத் தேவைகளை ஈடுசெய்வதற்கான வட்டியற்ற கடன் வசதிகள் என்பனவற்றையும் உள்ளடக்கியிருந்தன.